1981 பிப்ரவரி 6]

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: (அ) மற்றும் (ஆ) கொடைக்கானல் வட்டம், பூம்பாறை கிராமத்தில் குண்டம்பாச்சி ஆற்றின் குறுக்கே அணைக்கட்டும் திட்டம் ஏதுமில்லை. ஆயினும் மேற்படி கிராமத்தில் குண்டம்பாச்சி ஆற்றின் குறுக்கே ரூ. 3 இலட்சத்தில் ஒரு கண்மாய் அமைக்கும் திட்டத்திற்கு 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் ரூ. 4.40 லட்சத்திற்கு சிறு பாசன தலைமைப் பொறியாளரால் புதுப்பிக்கப்பட்டு (up-dated) அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) இத் திட்டம் பாசன வசதி அளிப்பதற்காகவே வகுக்கப்பட்டதாகும். குடிநீர் வழங்குவதற்கான நோக்கம் இல்லை.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: துணைத் தலைவரவர்களே இத் திட்டத்தால் பயன் அடையும் கிராமங்கள் என்னென்ன என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது: துணைத் தலைவரவர்களே, இது பாசன வசதிக்காக வகுக்கப்பட்ட திட்டமாகும். ஏறக்குறைய அந்தப் பகுதியிலே உள்ள 117.83 ஏக்கர் விவசாயத்திற்குப் பயனடையக்கூடிய அளவிற்கு இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

சுகநதி கண்மாய்

*வினா எண் 218—திரு. செ. குப்புசாமி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் வந்தவாசி தொகுதி சுகநதியில் நாகர்மேடு கொண்டம் கட்டுவது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: வட ஆற்காடு மாவட்டம் வந்தவாசி வட்டம் நாகர்மேடு கிராமம் அருகில் சுகநதியின் குறுக்கே அணை கட்டுவதற்கான மதிப்பீடு ரூ. 12,24,800 செலவில் சிறுபாசனத் தலைமைப் பொறியாளரால் வருவாய் வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் தற்போது ஆணையர் (நில நிர்வாகம்) அவர்களின் ஆய்வில் உள்ளது. அவரது பரிந்துரை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. செ. குப்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்பதையும், எப்பொழுது முடியும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : துணைத் தலைவர வர்களே, ஆணையர் (நில நிர்வாகம்) அவர்களின் ஆய்வில் இருக்கிறது. அவரது பரிந்துரையை எதிர்பார்க்கிறோம். பரிந்துரை வந்தவுடன் திட்டம் எடுத்துக் கொள்ளப்படும். திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்ட ஓராண்டிலே அது முடிவுறும்.

அரியலூர் சிமெண்ட் ஆலை.

*வினா எண் 219—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அரியலூர் சிமெண்ட் ஆலையில் தற்பொழுது உற்பத்தி ஆகும் சிமெண்ட் அளவின் மதிப்பு எவ்வளவு?

(ஆ) இந்த சிமெண்ட் நமது மாநிலத்திற்கு மட்டுமே விநியோகிக்கப்படுகிறதா?

(இ) வெளி மாநிலத்திற்கு அனுப்பப்படுகிறது என்றால் அதன் மதிப்பு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) அரியலூர் சிமெண்ட் ஆலை 1979–80 ஆம் ஆண்டு 1,15,919 டன் சிமெண்ட் உற்பத்தி செய்தது. 1980–81 ஆம் ஆண்டு 3,50,000 டன் சிமெண்ட் உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 31 ஆம் நாள் வரை 1,84 000 டன் சிமெண்ட் உற்பத்தி செய்துள்ளது.

(ஆ) அரியலூர் ஆலையில் தயாரிக்கப்படும் சிமெண்ட் நமது மாநிலத்தில் மட்டுமல்லாமல், மற்ற மாநிலங்களிலும் மத்திய அரசின் சிமெண்ட் கட்டுப்பாடு அதிகாரியின் உத்தரவின் படி விநியோகிக்கப்படுகிறது.

(இ) 1979–80 ஆம் ஆண்டில் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்பட்ட சிமெண்டின் மதிப்பு ரூ. 2,67,70.722.55 (56,920.9 டன்கள்).

திரு. ஜே. எஸ். இராசு : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலையில் ஆண்டு தோறும் திட்டமிட்டபடி உற்பத்தி செய்யப்படுகிறதா என்பதை அமைச்சர் அறிவிப்பாரா?